## முடிவு பாடல்:

### இறைவனுன் புகழ் பாட

இறைவனுன் புகழ் பாட - இங்கே
இதயங்கள் பல கோடி
துறையெல்லாம் கடந்தவனே - உன்
துணையோன்றே நாம் தேடி

1. மறை பொருள் ஆணவனே - உன்னை
   மனங்களில் சிறை வைத்தோம்   2
   குறையுள்ள கோயிலிலே - உன்னை
   கொண்டு நாம் குடி வைத்தோம்

2. அன்பு உன் பேர் அறிவோம் - தூய
   அறிவென்றும் நாம் தெரிவோம்   2
   இன்பம் நீ எனத் தெளிவோம் - நல்ல
   இரக்கம் நீ என மொழிவோம்

3. சத்தியம் உன் பெயராம் - எனச்
   சாற்றுவோம் எம் உயிராம்   2
   நித்தனே உனைப் பணிந்தோம் - உன்
   நினைவினில் நாம் கனிந்தோம்

## இறுதிச் செபம்:

இறுதிச் செபத்தைச் சொல்ல மற்றொரு அதிச
உறுப்பினரை அழைக்கலாம்.

Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

INTERNAL CIRCULATION ONLY



# அதிசசிந்தனை



## கருப்பொருள்:

# எல்லையற்ற சாட்சியம்

கடவுள் தமது மக்களை அழைத்து, உலகிற்கு அனுப்புகிறார். நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள எல்லா விசுவாசிகளுக்கும் அழைப்பு கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவர்களில் சிலர் இதற்காக கடவுளால் திருநிலைப்படுத்தப்பட்டுள்ளனர். திருச்சபையால் உறுதிப்படுத்தப்பட்டு அவர்கள், நற்செய்தியால் கவரப்பட்டு மறைப்பரப்பு பணியில் ஈடுபடுகின்றனர்.

## ஆரம்பப் பாடல்:

# அன்பும் நட்பும் எங்குள்ளதோ

அன்பும் நட்பும் எங்குள்ளதோ
அங்கே இறைவன் இருக்கின்றார் 2

1. கிறிஸ்துவின் அன்பு நம்மையெல்லாம்
ஒன்றாய் கூட்டி சேர்த்ததுவே
அவரில் அக்களித்திடுவோம் யாம்
அவரில் மகிழ்ச்சி கொள்வோமே
ஜீவிய தேவனுக்கு அஞ்சிடுவோம்
அவருக்கு அன்பு செய்திடுவோம்
நேரிய உள்ளத்துடனே யாம்
ஒருவரையொருவர் நேசிப்போம்

2. எனவே ஒன்றாய் நாமெல்லாம்
வந்து கூடும் போதினிலே
மனதில் வேற்றுமை கொள்ளாமல்
விழிப்பாய் இருந்துகொள்வோமே
தீய சச்சரவுகள் ஒழிந்திடுக
பிணக்குகள் எல்லாம் போய் ஒழிக
நமது மத்தியில் நம் இறைவன்
கிறிஸ்து நாதர் இருந்திடுக

## தொடக்கச் செபம்:

செபம் சொல்ல அதிச
உறுப்பினர் ஒருவரை
அழைக்கலாம்

## உரையாடல்

திருச்சபை பொதுநிலை தலைவர்களில் ஒருவரான ஜிம், அங்குள்ள பகுதிக்கு குடிபெயரும் புதியவர்களிடம் நற்செய்தியைப் பணியைக் கவனித்து வந்தார். அகதிகளான சன் லீயும் அவரது குடும்பத்தினரும் அந்த பகுதிக்கு அண்மையில் குடியேறினர். அவர்களிடம் ஒன்றுமில்லை, யாரையும் தெரியாது. அவர்களுக்கு எல்லா வகையிலும் உதவி தேவைப்பட்டது. அவர்களுக்ககாக உணவு ஏற்பாடு செய்வதன் வழியாக ஜிம் உதவி செய்யத் தொடங்கினார். சன் லீக்கு நல்ல ஒரு வேலை கிடைக்கவும் உதவி செய்தார். இயேசு கிறிஸ்து பற்றி நிறைய சொல்ல வேண்டும் என ஜிம் விரும்பினார். ஆனால் அவர்க்கு வியட்னாமிய மொழி தெரியவில்லை. அதே வேளை, அந்த அகதிக்கு ஆங்கிலம் முழுமையாக விளங்கவில்லை. நெருக்கமான நண்பர்களாக இருக்க ஒருவர் மற்றொருவரின் மொழியைக் கற்றுக் கொள்ள இருவரும் முயன்றனர். ஒரு நாள், இயேசுவைப் பற்றி சன் லீயிடம் சொல்வதற்கு தாம் தயார் என கருதினார், ஜிம். கடவுளை பற்றியும் இயேசுவைப் பற்றியும் சன் லீயிடம் சொல்லத் தொடங்கினார், ஜிம். ஆங்கிலத்தில் ஜிம் கூறியதன் சிலவற்றை வியட்னாமிய மொழியில் சன் லீ ஒப்புவித்தார். இறுதியாக, வெறுப்பும் விரக்தியும் அடைந்த ஜிம், வியட்னாமிய மொழியை இன்னும் நன்றாக கற்றுக் கொள்ள முடிவு செய்தார். ஒரு சமயத்தில் சன் லீ உளறிக் கொட்டினார், “உங்கள் கடவுள் உங்களைப் போல் இருப்பாரா? அவர் உங்களைப் போல் இருந்தால், அவரைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புகிறேன்” . தன்னை விட இயேசு மேலானவர் என ஜிம் தெரிவித்தார். இயேசு கிறிஸ்து, ஜிம்மை போல் இருந்தால் அந்த இயேசு கிறிஸ்துவைப் பற்றி தெரிந்து கொள்ள சன் லீ விரும்பினார். இத்தனை காலமும் நற்செய்தியைப் பற்றி அவரிடம் பேசியது கிடையாது என்பதை ஜிம் உணர்ந்தார். உரையாடுவதற்கான அனைத்து வசதிகளையும் பயன்படுத்தி, உரையாடலை அவர் தொடங்கினார். இயேசு கிறிஸ்துவைப் பற்றியே அவர்களின் உரையாடல் அமைந்தது.

### பகிர்வுக்கான கேள்வி

கடவுளின் பிரசன்னம் எல்லைக்கு அப்பாலும் உள்ளது. நமது சாட்சியங்களின் வழியாக கடவுளின் தன்மை பிரதி பலிக்கின்றது. மற்ற மதத்தை சார்ந்த மக்களுக்கு நமது உதவி தேவைப்படுகின்றதா?

## உணர்வு

### திப. 5:29—32

அதற்குப் பேதுருவும் திருத்தூதரும் மறுமொழியாக, “மனிதர்களுக்குக் கீழ்படிவதைவிட கடவுளுக்கு அல்லவா கீழ்ப்படிய வேண்டும்? நீங்கள் சிலுவையில் தொங்கவைத்துக் கொன்ற இயேசுவை நம் மூதாதையரின் கடவுள் உயிர்த்தெழச் செய்தார். இஸ்ரயேல் மக்களுக்கு மனம் மாற்றத்தையும் பாவமன்னிப்பையும் அளிப்பதற்காகக் கடவுள் அவரைத் தலைவராகவும் மீட்பராகவும் தமது வலபக்கத்துக்கு உயர்த்தினார். இவற்றுக்கு நாங்களும் கடவுள் தமக்குக் கீழ்படிவோருக்கு அருளும் தூய ஆவியும் சாட்சிகள்” என்றனர்.

கவனிக்க வேண்டிய முக்கிய பகுதி; இவற்றுக்கு நாங்களும் சாட்சிகள்
அப்போஸ்தலர் காலம் தொட்டு, சாட்சிகளின் சங்கிலி தொடர்கிறது,
யூதர்கள், புறவினத்தார்... எஞ்சிய உலகம்

### சிந்தனை:

- 12 அப்போஸ்தலர்களும் எல்லைக் கடந்து சாட்சியம் பகர்ந்தனர்.
- இன்று நாம் கிறிஸ்துவிற்கு எவ்வாறு சாட்சியம் பகர்கிறோம்?
- ஆலயம் அல்லது குடும்பம் என்ற குறுகிய வட்டத்திற்குள் மட்டுமே நமது செயல்பாட்டை அடக்கிக் கொள்கிறோமா?
- நாட்டின் நடப்பு விவகாரங்களில் ஈடுபட இந்த எல்லையைக் கடந்து நம்மால் செல்ல முடியுமா?

### செயல்:

ஒவ்வொரு நாட்டிலும் அல்லது இனத்திலும், தங்களது சமூகக் கலாச்சாரத்தைத் தாங்கி பிடிக்கும் ஆண்களும் பெண்களும் இருக்கின்றனர், அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே வருகிறது. எனவே உலகம் முழுவதும் சுய உரிமை மற்றும் பொறுப்புணர்வு மீதான விழிப்புணர்வு ஏற்பட்டு வருகிறது. இது மனுக்குலத்தின் ஆன்மீக மற்றும் தார்மீக முதிர்ச்சிக்கு அவசியம். ஐக்கியமான உலகத்தையும் உண்மையும் நீதியும் நிறைந்த உலகத்தையும் உருவாக்கும் பொறுப்பு நமக்குள்ளது என்பதை எண்ணும் போது இது மிகவும் தெளிவாகிறது. இதனால் புதியதொரு மனிதன் பிறப்பான், அவனே தனது சகோதர-சகோதரிகளுக்குக் காவலனாய் இருப்பான். (GS55)

நடவடிக்கை: அதிச என்ற வகையில், தமது சுற்றுவட்டாரத்தில் கிறிஸ்துவிற்கு சாட்சியாக இருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?